பக்கங்கள்: 07

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 கார்த்திகை 04 செவ்வாய்க்கிழமை 22.11.2022 கதிர் 269

## நாட்டு மக்களுக்கான ஒருநாள் வாய்ப்புக்கள்

இலங்கையின் 75ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு பொதுமக்களுக்குச் சில விசேட வாய்ப்புக்களை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதன்படி, சுதந்திர தினமான அடுத்த வருடம் பெப்ரவரி 4 ஆம் திகதி தேசிய பூங்காக்கள், தாவரவியல் பூங்காக்கள் 2

# ரணிலின் 'பட்ஜட்'டை எதிர்க்காமல் இருக்க தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்கள் தீர்மானம்



### வாக்கெடுப்பைத் தவிர்க்கவும் முடிவு

**2023ஆம் நிதியாண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் இரண் டாம் வாசிப்பை எதிர்த்து வாக்களிப்பதில்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தீர்மானித்துள்ளது.**

**வரவு - செலவுத் திட்டத்தின் இரண் டாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு இன்று மாலை நாடாளுமன்றத்தில் நடைபெறவுள்ளது.** 2

## தேர்தலைப் பிற்போட 'மொட்டு' இடமளிக்காது

### சாகர எம்.பி. திட்டவட்டம்




தேர்தல் என்பது மக்களின் ஜனநாயக உரிமை. உரிய காலத்துக்குள் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே எமது கட்சி உள்ளது. எனவே, தேர்தலைப் பிற்போடுவதற்கு நாம் இடமளிக்க மாட்டோம்.

– இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரி–யவசம் எம்.பி. தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:– 2

## தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து வந்தால் பேச்சு நடத்த நான் 'ரெடி'

### ஜனாதிபதி இப்படி அறிவிப்பு



தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து வந்தால் அவர்களுடன் தீர்வு தொடர்பில் பேச்சு நடத்த எந்தநேரமும் நான் தயாராக வுள்ளேன்.

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

தமிழர்களின் பிரச்சினைகளுக்கான தீர்வு தொடர்பில் தமிழ்க் கட்சிகளுடன் எப்போது பேச்சை ஆரம்பிக்கவுள்ளீர்கள் 2

## 78,700 போதை வில்லைகளுடன் கொழும்பில் ஒருவர் சிக்கினார்

கொழும்பு – முகத்துவாரம் மற்றும் களுபோவில ஆகிய பகுதிகளில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்புகளின் போது ஒரு தொகை போதை வில்லைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

கொழும்பு வடக்கு குற்ற விசாரணைப் பிரிவினரால் முன்னெடுக்கப்பட்ட இந்தச் சுற்றிவளைப்பில் 78 ஆயிரத்து 700 போதை வில்லைகளுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் இன்று தெரிவித்தனர்.

சந்தேகநபர் இந்தப் போதைப்பொருள் தொகையைச் சட்டவிரோதமான முறையில் வான் மற்றும் கடல் மார்க்கமாகக் கொண்டு வந்துள்ளார் என்றும் பொலிஸார் மேலும் கூறினர்

## ரயில் மோதி குடும்பஸ்தர் பரிதாபப் பலி

யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புங்கன்குளம் பகுதியில் ரயில் மோதியதில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்தார்.

செ.விமலதாஸ் (வயது 43) என்ற நபரே இவ்வாறு உயிரிழந்தார்.

மரணம் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## 80 வீதமான கைதிகள் 'போதை'க்கு அடிமை

### நீதி அமைச்சர் தகவல்



இலங்கையில் சிறைச்சாலைகளில் உள்ள கைதிகளில் 80 வீதமானோர் போதைப்பொருளுக்கு அடிமையானவர்கள் என்று நீதி, சிறைச்சாலைகள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்தார்.

அச தகவல் திணைக்களத்தில் இன்று நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக 2

## ஜனாதிபதியை நம்பி ஏமாற வடக்கு மக்கள் தயார் இல்லை



### ஐக்கிய மக்கள் கூட்டணியின் ஆட்சியில் தமிழர்களுக்குத் தீர்வு என்கின்றார் சஜித்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வாக்குறுதிகளை நம்பி ஏமாறுவதற்கு வடக்கு மக்கள் தயார் இல்லை. எனது ஆட்சியின் கீழ் வடக்கு மக்களின் பிரச்சினை விரைந்து தீர்க்கப்படும். இவ்வாறு எதிர்க் கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித்பிரேமதாஸ தெரிவித்தார்.

வடக்கு மக்கள் மீது ஜனாதிபதிக்கு 2

## பஸிலின் வருகையால் அச்சத்தில் எதிரணிகள்

### 'மொட்டு' கூறுகின்றது



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்சவின் வருகையால் எதிரணிகள் பீதியில் உள்ளன. அதனால்தான் அவருக்கு எதிராகச்சேறுபூசும்பரப்புரைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

– இவ்வாறு ஸ்ரீலங்கா 2

## தமிழ்க் கட்சி ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று ஜனாதிபதியிடம் ஊடகம் ஒன்று வினவியபோதே அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:–

தமிழ்க் கட்சிகளைப் பேச்சுக்கு வருமாறு நாடாளுமன்றத்தில் வைத்து நான் பகிரங்க அழைப்பை விடுத்துள்ளேன். தமிழ்க் கட்சிகள் முன்வந்தால் பேச்சை எந்நேரமும் ஆரம்பிக்க நான் தயாராகவுள்ளேன். எந்தப் பிரச்சினைகளுக்கும் பேச்சு மூலம் தீர்வு காண முடியும். நான் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற விரைந்து நடவடிக்கை எடுப்பேன். அதற்கு அனைவரினதும் ஒத்துழைப்பு கிடைக்கவும் வேண்டும் – என்றார்.

## ரணிலின் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பில் இன்று காலை நடைபெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்திலேயே மேற்படி முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

வரவு – செலவுத் திட்டத்தில் எதிர்த்து வாக்களிக்கக் கூடிய – தமிழ் மக்களுக்கு அதிருப்தியை ஏற்படுத்துகின்ற பல விடயங்கள் உள்ளன. எனினும், தமிழ் மக்களின் தேசிய பிரச்சினைக்கு விரைந்து தீர்வு காணப்போவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பகிரங்கமாக அறிவித்துள்ளார். இந்தச் சமயத்தில் நாங்கள் எதிர்த்து வாக்களிப்பது சில வேளைகளில் அந்த முயற்சியைக் குழப்புவதாக அர்த்தப்படலாம். எம்மை நோக்கி அப்படியான குற்றச்சாட்டும் வரக்கூடும். அதைத் தவிர்ப்பதற்காக வரவு – செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பை எதிர்த்து வாக்களிப்பதில்லை என்று முடிவெடுத்துள்ளோம் – என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

எனவே, இன்று மாலை நடைபெறவுள்ள வாக்கெடுப்பில் தாம் கலந்துகொள்ளாமல் இருக்கத் தீர்மானித்துள்ளோம் என்றும் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மேலும் கூறினர்.

## தேர்தலை........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சிக் கான மக்கள் ஆதரவு குறையவில்லை. 25 ஆயிரம் பேர் வீதிக்கு இறங்கினார்கள் என்பதற்காக எமது ஆதரவு தளம் சரியாது. முகநூலில் யார் என்னதான் எழுதினாலும் மக்கள் மனங்களில் 'மொட்டு'தான் உள்ளது. தேர்தல் ஒன்று நடத்தப்பட்டால் அது தெரியவரும்.

எனவேதான் நாமும் தேர்தலைக் கோருகின்றோம். தேர்தலைப் பிற்போடுவதற்கு இடமளிக்கமாட்டோம். முன்கூட்டியே தேர்தலை நடத்துகின்றனர் என்ற குற்றச்சாட்டுதான் ராஜபக்சக்களுக்கு உள்ளது – என்றார்.

## நாட்டு மக்க........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் பொழுதுபோக்குப் பூங்காக்களை இலவசமாகப் பார்வையிட பொதுமக்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

நேற்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த விசேட தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

மேலும், எதிர்வரும் பெப்ரவரி 4 ஆம் திகதி நடைபெறவுள்ள 75 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு, பொதுமக்கள் திரைப்படம் பார்க்கும் வாய்ப்பை வழங்கும் வகையில், நாடு முழுவதும் உள்ள திரையரங்குகளில் டிக்கெட் கட்டணத்தை 50 வீதத்தால் குறைக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## பஸிலின்........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:–

பஸில் ராஜபக்ச செல்லாக் காசாகிவிட்டார், அவரால் முடியாது என கூளுரைத்து வந்த எதிர்க்கட்சிகள், அவரின் வருகையால் கலக்கமடைந்துள்ளன. மண்ணெண்ணெய் பட்ட பாம்பு போல் துடிக்கின்றன. பஸிலுக்கு எதற்காக இவ்வளவு பயம்? அவர் செல்லாக் காசெனில் எதற்காக அஞ்ச வேண்டும்?

பொய்கள் புயல் போல் வீசும். உண்மைதான் வெல்லும். அதற்குக் காலம் செல்லும். அந்தவகையில் பஸில் தொடர்பில் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகள் பொய்யானவை என்பது தெரியவரும்.

நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைத் துறந்தாலும், 'மொட்டு'க் கட்சிக்கு பஸில் ராஜபக்சவே தலைமைத்துவம் வழங்குவார் – என்றார்.

## 80 வீத........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சந்திப்பின் போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் உள்ள சிறைகளில் தற்போது 26 ஆயிரம் கைதிகள் உள்ளனர். இவர்களில் 80 சதவீதமானோர் போதைப்பொருள் பாவனை மற்றும் அதனுடன் தொடர்புபட்ட குற்றங்களுக்காகக் கைது செய்யப்பட்டு சிறை வைக்கப்பட்டுள்ளனர் – என்றார்.

## ஜனாதிபதியை......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உண்மையான கரிசனை இருந்தால் அவர் வவுனியாவில் வைத்து வழங்கிய வாக்குறுதிகளை எதிர்வரும் 75ஆவது சுதந்திர தின நிகழ்வுக்கு முன்னர் நிறைவேற்றிக் காட்டட்டும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சவால் விடுத்தார்.

வடக்கின் பிரச்சினைக்குத் தீர்வு காணும் போது சிங்கள, தமிழ், முஸ்லிம் உள்ளிட்ட அனைத்து மக்களையும் ஒன்றிணைத்து அதற்கான தீர்வுகளைப் பெற்றுக்கொடுக்க தயார் என்றும், 75ஆவது சுதந்திர தின விழாவின் போதாவது இந்த நாட்டின் அனைத்து மக்களும் ஒரு தாயின் பிள்ளைகளாக வாழக்கூடியதாக இருக்க வேண்டும் எனத் தான் பிரார்த்திப்பதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தார். ஜனாதிபதி அலுவலகத்தின் கீழ் செயற்படும், வடக்கு மாகாண அபிவிருத்தி விசேட பிரிவின் உப அலுவலகத்தை கடந்த சனிக்கிழமை வவுனியாவில் திறந்து வைத்து உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைக் கூறியிருந்தார்.

ஜனாதிபதியின் இந்தக் கருத்து தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

வடக்கு மாகாணத்துக்கு நான் விரைவில் விஜயம் மேற்கொள்ளவுள்ளேன். அங்குள்ள ஒவ்வொரு மாவட் டத்துக்கும் செல்லவுள்ளேன். வடக்கு மக் கள் படும் இன்னல்களை நான் நேரில் ஆராயவுள்ளேன். ஐக்கிய மக்கள் கூட்டணி ஆட்சியமைத்தால் அவர்களின் பிரச்சினைகளுக்கு நான் விரைந்து தீர்வு காண்பேன்.

வடக்கு மக்களுக்கு நான் என்றுமே நன்றியுடையனவாக இருக்கின்றேன். கடந்த ஜனாதிபதித் தேர்தலில் அமோக வாக்குகளை எனக்கு அவர்கள் வழங்கினார்கள் – என்றார்.






# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com


## நல்லிணக்க சமிக்ஞை

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிதியமைச்சர் என்ற முறையில் சமர்ப்பித்துள்ள வரவு –செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீது இன்று மாலை நாடாளுமன்றத்தில் வாக்கெடுப்பு நடக்கும் போது, அதை எதிர்த்து வாக்களிப்பதில்லை என்ற தீர்மானத்தைத் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற குழு இன்று காலை கூடி மேற்கொண்டிருக்கின்றது.

எதிர்பார்க்கப்பட்ட முடிவுதான் இது. இன்று காலை இப்பத்திரிகையின் இதே பத்தியில், இப்படியான முடிவுதான் எடுக்கப்படும் என்று தெளிவாகக் கோடி காட்டப்பட்டிருந்தது. அதுவே எதிர்பார்க்கப்பட்டபடி நடந்துள்ளது.

ரணில் – தினேஷ் குணவர்த்தன அரசுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விடுத்துள்ள நல்லெண்ண சமிக்ஞையாகவே இது கொள்ளப்பட வேண்டும்.

இந்த வரவு – செலவுத் திட்டத்தை தமிழர் தேசம் முழுமையாக எதிர்ப்பதற்குப் பல காரணங்கள் உண்டு.

யுத்தம் முடிந்து பதின்மூன்று ஆண்டுகள் கழிந்த பின்னரும், முன்னெப்போதும் இல்லாத வகையில் பாதுகாப்பு அமைச்சுக்கு உச்சத் தொகையை ஒதுக்கியமை மூலம் பௌத்த, சிங்கள ஆட்சிப் பீடம் எதைச் செய்வதற்கு தொடர்ந்து விழைகின்றது என்பது தமிழ் மக்களுக்கு நன்கு தெரியும்.

அப்படி இருந்தும், இந்த வரவு – செலவுத் திட்டத்தை எதிர்க்காமல் விடுவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எடுத்த தீர்மானம், நல்லிணக்க நோக்கத்தை சிதைக்க கூடாது என்ற புரிந்துணர்வின் அடிப்படையில் என்பது விசேடமாகக் கவனிக்கப்பட வேண்டும்.

நாட்டின் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு விரைந்து தீர்வு என்கிறார். அடுத்த சுதந்திர தினக் கொண்டாட்டத்தின் போது இலங்கையில் எல்லோரும் ஒரு தாய் மக்களாக ஒன்றுபட்டிருக்கக்கூடிய ஐக்கிய நிலைமையை ஏற்படுத்த முயற்சிப்பேன் என்று உறுதி கூறுகிறார்.

அத்தகைய முயற்சிக்கு நல்ல பிரதிபலிப்பை காட்டுவதற்காகவே அவரின் வரவு – செலவுத் திட்டத்தை எதிர்க்காமல் விடுவதற்குத் தமிழ்க் கூட்டமைப்பு தீர்மானித்திருக்கிறது.

நல்லிணத்திற்கான முயற்சியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஈடுபட்டு, காய்களை நகர்த்தும்போது, அவருக்கு எதிரித்தன்மை காட்டுவது போல வரவு – செலவு திட்டத்தை எதிர்த்து வாக்களிப்பது விரோதிப் பண்பை வெளிப்படுத்துவதாக அமைந்து விடும் என்ற கருத்தில், கூட்டமைப்பு இந்த முடிவை எடுத்திருப்பது அதன் இராஜதந்திர நகர்வுதான்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இந்த நல்ல தீர்மானத்துக்கு உரிய பிரதிபலிப்பை வலிமையாகக் காட்டுவதன் மூலம், இதிலிருந்து ஒரு நல்லிணக்கத்திற்கான திட்டம் கட்டவிழ்வதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வழி செய்ய முடியும்.

செய்வார் என்று எதிர்பார்ப்போம்...!



## மன்னாரிலிருந்து சர்வமத குழுவினர் கிளிநொச்சிக்கு!

மன்னாரில் இருந்து சர்வமத குழு ஒன்று நேற்று கிளிநொச்சி மாவட்டத்திற்கு விஜயம் செய்து அங்குள்ள சர்வமத தலைவர்களைவ் சந்தித்ததோடு, மதஸ்தலங்களுக்கும் விஜயம் செய்தனர்.

மன்னார்–கரித்தாஸ் வாழ்வுதயத்தின் ஏற்பாட்டில்,இயக்குநர் எஸ்.அன்ரன் அடிகளாரின் ஒருங்கினைப்பில் மன்னாரில் இருந்து சர்வ மத தலைவர்கள் உள்ளடங்களாக குழு ஒன்று நேற்று (திங்கட்கிழமை) காலை மன்னாரில் இருந்து கிளிநொச்சி மாவட்டத்துக்குச் சென்றனர். மன்னார் கரித்தாஸ் வாழ்வுதயத்தின் சமய நல்லிணக்க பிரிவின் ஊடாக உறவுப்பால நிகழ்வாக இந்த விஜயம் அமைந்தது.

மன்னாரில் இருந்து விஜயம் செய்த சர்வமத குழுவினர் கிளிநொச்சி கரித்தாஸ் அலுவலகத்தில் விசேட சந்திப்பு இடம்பெற்றது.

அதனைத ;தொடர்ந்து கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள சர்வமத மதஸ்தலங்களுக்கு மேற்படி குழுவினர் விஜயம் செய்து மதத் தலைவர்களுடன் கலந்துரையாடி தமது விஜயம் தொடர்பாகத் தெளிவுபடுத்தினர்.

## திருகோணமலைச் சிறையின் புதிய அதிகாரி பொறுப்பேற்பு



(எவ்.முபாரக்)

திருகோணமலை சிறைச்சாலையின் புதிய பிரதான ஜெயிலராக ஆர்.மோகனராஜா கடமைகளை நேற்று உத்தியோகபூர்வமாக பொறுப்பேற்றுக்கொண்டார்.

சிறைச்சாலையின் பிரதான ஜெயிலராக கடமையாற்றிய சம்பத் ஜெயவர்த்தன அங்குணுபொலபெலஸ்ஸ சிறைச்சாலைக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றதையடுத்தே பிரதான ஜெயிலர் ஆர்.மோகனராஜா நியமிக்கப்பட்டார்.

மட்டக்களப்பு சிறைச்சாலையில் கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக பிரதான ஜெயிலராக கடமையாற்றி ஆர்.மோகனராஜா திருகோணமலை சிறைச்சாலையின் கடமைகளை பொறுப்பேற்றுக்கொண்டார்.

இவர் பொலன்னறுவை சிறைச்சாலையிலும் பிரதான ஜெயிலராக கடமையாற்றி உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## காணிகளுக்கான பத்திரங்கள் பொத்துவிலில் விநியோகம்









பொத்துவில் 04, 17, 18, 21, 22 ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளைச் சேர்ந்த சிலருக்கு காணிகளுக்கான உத்தரவுப் பத்திரங்கள் அண்மையில் வழங்கிவைக்கப்பட்டன.

இவற்றை வழங்கி வைக்கும் நிகழ்வு அண்மையில் பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற போது திகாமடுல்ல மாவட நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம். முஷாரப் உத்தரவுப்பத்திரங்களை வழங்கி வைத்தார்.

குடியேற்ற உத்தியோகத்தர் எம்.ஏ. பஜீர் அஹமட், பொத்துவில் பிரதேசசபை தவிசாளர் எம்.எச். அப்துல் றஹீம், பிரதேச செயலாளர் எம்.ஐ.பிர்னாஸ் ஆகியோரும் நிகழ்வில் பங்குபற்றினர்..

(படம்.ஏ.பி.எம்.அஸ்ஹர்)

# இந்தோனேசியாவில் நேற்றுப் பாரிய நிலநடுக்கம் 252 பேர் சாவு; பல நூற்றுக்கணக்கானோர் காயம்







ஜகார்தா, நவ.22


இந்தோனேசியாவில் ஏற்பட்ட பாரிய நிலநடுக்கம் காரணமாக இறுதியாகக் கிடைக்கப் பெற்ற தரவுகளின் அடிப்படையில் 252 பேர் பலியாகி உள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தோனேசியாவில் உள்ள மேற்கு ஜாவா மாகா ணத்தில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம்

ஏற்பட்டது. இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவில் 5.6 ரிக்டர் எனப் பதிவாகியிருந்தது. நிலநடுக்கத்தால் ஒட்டு மொத்த நகரமே குலுங்கியது. இதனால் மக்கள் பதறியடித்துக்கொண்டு பீதியுடன் வீதிகளுக்கு ஓடி வந்தனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. மேலும், நிலநடுக்கத்திற்குப் பிறகு 25 முறை நில அதிர்வு ஏற்பட்டதாகவும் கூறப்படுகின்றது.

இதன் காரணமாக பலர் திறந்தவெளிகளுக்கும், மைதானங்களுக்கும் பதற்றத்துடன்,

அலறியடித்துக்கொண்டு நிலை கொண்டனர். இந்த நிலநடுக்கத்தால் சியாஞ்சூர் நகரம் அதிக பாதிப்புக்கு உள்ளானதாக கூறப்படுகிறது. ஆரம்பத்தில், இந்த நிலநடுக்கத்தால் பலியானவர்கள் எண்ணிக்கை 46 ஆக இருப்பதாகக் கூறப்பட்ட நிலையில் இதுவரை கிடைக்கப்பெற்றதரவுகளின் அடிப்படையில் நிலநடுக்கம் காரணமாக 252 பேர் பலியாகி உள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், நிலநடுக்கம் காரணமாக பலநூற்றுக் கணக்கானோர் படுகாயங்களுடன்மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனவும் கூறப்பட்டது. இந்த நில நடுக்கம் காரணமாக ஏராளமான வீடுகள் மற்றும் கட்டடங்கள் இடிந்து விழுந்தன. தொடர்ந்து இடிபாடுகளில் சிக்கியவர்களை மீட்கும் பணி நடைபெற்று வருகின்ற தாகவும், இறந்தவர்களின் உடல்களும் மீட்கப்பட்டு வருகின்றன எனவும் தெரிவிக்கப்பட்டது., மீட்புக் குழுக்களுடன் பொதுமக்களும் இணைந்து மீட்பு பணியில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## 2030இல் மனிதர்கள் நிலவில் வாழலாம் என நாஸா ஆருடம்!

வாஷிங்டன், நவ.22

1969 ஆம் ஆண்டில் முதன் முறையாக மனிதர்களை நிலவுக்கு அனுப்பி சாதனை படைத்த அமெரிக்கா மீண்டும் மனிதர்களை நிலவுக்கு அனுப்ப ஆயத்தமாகி வருகிறது. இதற்காக 'ஆர்டெமிஸ்' என்கிற திட்டத்தை அமெரிக்க விண்வெளி நிறுவனமான நாஸா கையில் எடுத்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

இதன் மூலம் 2025 இற்க்குள் மனிதர்களை நிலவுக்கு அனுப்ப நாஸா திட்டமிட்டுள்ளது. அந்த வகையில் மனிதர்களை நிலவுக்கு கொண்டு செல்வதற்காக உருவாக்கப்பட்டுள்ள ஓரியன் விண்கலம் சோதனை முயற்சியாக மனித மாதிரிகளுடன் எஸ்.எல்.எஸ். ரொக்கெட் மூலம் கடந்த வாரம் வெற்றிகரமாக நிலவுக்கு அனுப் பப்பட்டது. இது 'ஆர்டெமிஸ்' திட்டத்தை நிறைவேற்றுவதில் நாஸாவுக்குக் கிடைத்துள்ள முதல் வெற்றியாகும்.

இந்த நிலையில் ஓரியன் விண்கலம் வெற்றிகரமாக நிலவுக்கு அனுப்பப்பட்டது குறித்து ஓரியன் விண்கல திட்டத்தின் தலைவர் ஹோவர்ட் ஹு பிரபல தனியார் பத்திரிகை ஒன்றுக்கு பேட்டியளித்தார். அதன்போது அவர் தெரிவிக்கையில் –

2030 ஆம் ஆண்டுக்குள் மனிதர்கள் நிலவில் வாழலாம். நாம் மக்களை நிலவுக்கு அனுப்பப் போகிறோம், அவர்கள் நிலவில் வாழ்ந்து ஆராய்ச்சி செய்யப் போகிறார்கள். இது நாஸாவுக்கு வரலாற்று நாள். அதுமட்டுமல்ல, விண்வெளி ஆராய்ச்சிகளை விரும்பும் அனைவருக்கும் இது சிறந்த நாள். அதாவது, நாம் நிலவுக்குத் திரும்பிச் செல்கிறோம். அதற்காகவே இந்த நிலையான (ஆர்டெமிஸ்) திட்டத்தை நோக்கி செயல்படுகிறோம். என்று அவர் தெரிவித்துள்ளார்.

## ஹிஜாப் எதிர்ப்புக்கு ஆதரவு வெளிப்படுத்தி ஈரான் வீரர்கள் உலக கிண்ண ஆட்டத்தில் தேசியகீதம் பாடமல் தவிர்ப்பு!




கட்டார், நவ.22

தெஹ்ரானில் ஹிஜாப் சரியாக அணிய வில்லை என கூறி பொலிஸார் நடத்திய தாக்குதலில் கோமா நிலைக்கு சென்ற 22 வயதான மாஸா அமினி என்ற இளம்பெண் கடந்த செப்டம்பர் மாதம் 17 ஆம் திகதி உயிரிழந்தார். ஹிஜாப் சரியாக அணியவில்லை என கூறி பொலிஸா தாக்கியதில் அந்தப் பெண் உயிரிழந்த சம்பவத்தைக் கண்டித்து ஈரான் முழுவதும் பெண்கள் போராட்டத்தில்

குதித்திருந்தனர். ஹிஜாப்பை கழற்றி வீசியும், ஹிஜாப்பை தீ வைத்து எரித்தும் பெண்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். மேலும் இந்தப் போராட்டம் ஈரானின் பல நகரங்களுக்கும் பரவி வருகிறது.

இந்நிலையில், 2022 உலகக் கிண்ணக் கால்பந்து தொடர் கத்தார் நாட்டில் நடைபெற்று வருகிறது. கால்பந்து தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் ஈரான் – இங்கிலாந்து அணிகள் மோதி யிருந்தன. இப்போட்டி ஆரம்பமாக முன்பாக இரு நாடுகளின் தேசிய கீதங்களும் இசைக்கப்பட்டன. அதில், ஈரான் நாட்டின் தேசிய கீதம் இசைக்கப்பட்ட போது அந்நாட்டின் வீரர்கள் யாரும் தேசிய கீதத்தை பாடவில்லை. ஈரான் வீரர்கள் அனைவரும் தங்கள் வாயை அசைக்காமல் அப்படியே நின்றிருந்த னர்.

ஈரானில் போராட்டக்காரர்கள் மீது அரசு கடும் நடவடிக்கை எடுத்தும் வரும் நிலையில் ஈரான் அரசுக்கு எதிரான நிலைப்பாட்டை வெளிப்படுத்தவே உலகக் கிண்ணப் போட்டியின் போது தேசிய கீதம் இசைக்கப்பட்டபோது வீரர்கள் யாரும் பாடவில்லை என்று தகவல் வெளியாகியுள்ளது. ஹிஜாப் அணி வதற்கு எதிர்ப்பு தெரிவித்தும் அரசுக்கு எதிராகவும் ஈரானில் மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டு

வரும் நிலையில் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் உலகக் கிண்ணப் போட்டி யின் போது ஈரான் கால்பந்து வீரர்கள் தேசிய கீதத்தை பாடாமல் நின்றமை தற்போது பேசு பொருளாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# 71 ஆயிரம் பேருக்கு மோடி இன்று அரச நியமனங்கள் வழங்குகின்றார்



புதுடெல்லி,நவ.22

அடுத்த ஒன்றரை ஆண்டுகளில், 10 லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்குமாறு அனைத்து மத்திய அரசு துறைகளையும் பிரதமர் மோடி கடந்த ஆனி மாதம் கேட்டுக் கொண்டமையையடுத்து, கடந்த ஒக்டோபர் மாதம், புதிதாக தேர்ந் தெடுக்கப்பட்ட 75 ஆயிரம் பேருக்கு பிரதமர் மோடி பணி நியமன கடிதங்களை வழங்கினார்.

இந்நிலையில், மத்திய அரசின் ரோஜ்கார் மேளா (வேலைவாய்ப்பு கண்காட்சி) இன்று (செவ்வாய்க் கிழமை) நடைபெறவுள்ளது. அதில், சுமார் 71 ஆயிரம் பேருக்கு காணொ லிக் காட்சி மூலமாக பிரதமர் மோடி பணி நியமன கடிதங்களை வழங்க வுள்ளார். அத்துடன், 71 ஆயிரம் பேருக்கும் காகித வடிவிலான பணி நியமனக் கடிதங்கள், நாடு முழுவ தும் 45 இடங்களில் நேரடியாக வழங்கி வைக்கப்படுகின்றன.

சட்டசபை தேர்தல் நடக்கும் குஜ குராத், இமாசலபிரதேசம் ஆகிய மாநிலங்களில்பமட்டும் இந்நிகழ்ச்சி நடைபெறாது. வேலைவாய்ப்பு உருவாக்குவதற்கு உயர்முன்னு ரிமை அளிக்கும் பிரதமரின் உறுதிப்பாட்டை இது காட்டுவதாகப் பிரதமர் அலுவலகம் கூறியுள்ளது. மேலும் வேலைவாய்ப்புகளை உருவாக்க இது தூண்டுகோலாக அமையும் என்றும் தெரிவித்துள் ளது. மேலும், புதிதாக தேர்ந்தெடுக் கப்பட்டவர்களுக்கு நிகழ்நிலை புத் தாக்க பயிற்சி திட்டத்தையும் பிரதமர் மோடி தொடங்கி வைக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

## அ.தி.மு.க பொதுக்குழு தொடர்பான வழக்கு விசாரணை 30 ஆம் திகதிக்கு ஒத்திவைப்பு!



புதுடெல்லி, நவ.22

அ.தி.மு.க பொதுக்குழு விவகாரம் தொடர்பாக ஓ.பன்னீர்செல்வம், வைரமுத்து தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனுக்கள் மீதான விசாரணையை உச்ச நீதிமன்றம் எதிர்வரும் நவம்பர் 30ஆம் தி கதிக்கு ஒத்தி வைத்துள்ளது. இந்த மனுக்கள் மீதான விசாரணை நேற்றையதினம் உச்ச நீதிமன்ற நீதிபதிகள் தினேஷ் மகேஸ்வரி, சுதான்சு துலியா ஆகியோர் அடங்கிய அமர்வு முன்பு நடைபெற்றது.

பொது குழு விவகாரம் தொடர்பாக எடப்பாடி பழனிச்சாமி கடந்த வாரம் பதில் மனுவைத் தாக்கல் செய்திருந்தார். அந்த பதில் மனுவுக்கு விளக்க மனு தாக்கல் செய்யும் வகையில் விசாரணையை தள்ளி வைக்க வேண்டுமென வைரமுத்து சார்பில் ஆஜரான வக்கீல் கோரிக்கை விடுத்தார். இது தொடர்பாக கோரிக்கைக் கடிதம் அளிக்கப்பட்டுள்ளதாக நீதிபதிகளிடம் தெரிவித்த போது, நீதிபதி கள் அது தொடர்பான கோரிக்கை கடிதம் எங்களுக்கு கிடைக்கவில் லை என்றும் விசாரணையை தள்ளி வைக்க கூடாது என்று எடப்பாடி பழனிச்சாமி தரப்பில் அளிக்கப்பட்ட

கடிதம் மட்டுமே தங்களுக்கு கிடைத்ததாகவும், அதன் வாயி லாகத்தான் தள்ளி

வைக்க வேண்டும் என்ற கோரிக்கை கடிதத்தை நாங்கள் அறிந்து கொண்டோம் என்றும்

தெரிவித்தனர்.

இதைத் தொடர்ந்து எடப்பாடி பழனிச்சாமி தரப்பில் ஆஜரான வக்கீல்கள் உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்குகள் காரணமாக, திருத்தப்பட்ட அ.தி.மு.க விதிகளை தேர்தல் ஆணையம் வெளியிட மறுக்கிறது என்ற வாதத்தை முன் வைத்தனர். அனைத்து தரப்பு வாதங்களையும் பதிவு செய்து கொண்ட நீதிபதிகள், இந்த வழக்கு விசாரணையை ஓ.பன்னீர்செல்வம் தரப்பினர் கேட்டுக் கொண்டதற்கு இணங்க நவம்பர் 30 ஆம் திகதிக்கு தள்ளி வைத்துள்ளனர். அதற்குள் விளக்க மனு தாக்கல் செய்யவும் ஓ.பன்னீர்செல்வம் தரப்புக்கு உச்ச நீதிமன்றம் அவகாசம் அளித்து உத்தரவிட்டுள்ளது.

## ஐக்கிய அரபு அமீரக வெளியுறவு அமைச்சர் இந்தியாவுக்கு வருகை





புதுடெல்லி, நவ.22

ஐக்கிய அரபு அமீரக வெளியுறவுத்துறை அமைச்சர் இரண்டு நாள் பயணமாக இந்தியா வருகை தந்துள் ளார். இரு நாடுகளுக்கு இடையேயான உறவை மேலும் வலுப்படுத்தும் வகையில் இந்தச் சுற்றுப்பயணம் அமையும் என்று எதிர்பார்க் கப்படுகிறது. இவ்வாறு வருகை தந்துள்ள சேக் அப்துல்லாவுடன் உயர்மட்ட அளவிலான அதிகாரிகள் குழுவினரும் வந்துள் ளனர்.

இந்தச் சுற்றுப் பயணத்தின் போது இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கரை சேக் அப்துல்லா சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.

இது தொடர்பாக இந்திய வெளியுறவுத்துறை அமைச்சகம் வெளியிட் டுள்ள அறிக்கையில், இரு நாடுகளுக்கும் இடையேயான வழக்கமான ஆலோசனையின் ஓர் அங்கமாக இந்தப் பய ணம் அமைந்துள்ளது. இருநாடுகளுக்கும் இடையேயான விவகாரம் மற்றும் சர்வதேசவிவகா ரங்கள் குறித்தும் ஆலோ சிக்கப்படும் என்று தெரி விக்கப்பட்டுள்ளது.

பிரதமர் மோடி கடந்த ஆனி மாதம் 28 ஆம் திகதி ஐக்கிய அரபு அமீரகம் பயணம் மேற்கொண்டு இருந்தார். அப்போது ஐக்கிய அரபு அமீரக அதி பர் சேக் முகம்மது பின் சையத் அல் நஹ்யானை சந்தித்துப் பேசியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.



## தமிழ்நாட்டில் மின் கட்டண உயர்வுக்கு தடை விதிக்க முடியாது: உச்ச நீதிமன்றம் தெரிவிப்பு

புதுடெல்லி, நவ.22

தமிழ்நாட்டில் மின் கட்டண உயர்வுக்கு தடை விதிக்க முடியாது எனவும் தமிழக அரசு சுப்ரீம் கோர்ட்டில் கொடுத்த கால அவகாசத்துக்குள் உறுப்பினர் நியமனத்தைச் செய்ய வேண்டும் எனவும் உச்ச நீதிமன்றம் கூறியுள்ளது

தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தில் சட்டத்துறையைச் சேர்ந்தவர்கள் சேர்க்கப்பட்டதற்கு பின்னர்தான் மின் கட்டண உயர்வு குறித்து முடிவெடுக்க வேண்டும் எனக்கூறி தமிழ்நாடு நூற்பாலைகள் சங்கம் சார்பில் உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது.

இவ்வழக்கு நீதிபதி எஸ்.கே.கவுல் தலைமை யிலான அமர்வில் நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது மனுதாரர்கள் தரப்பில், கடந்த 3 மாதத்துக்கு முன்னர் உச்ச நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தும் இதுவரை தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்துக்கு சட்டத்துறையை சேர்ந்த நபர் நியமனம் செய்யப்படவில்லை. எப்போது உறுப்பினர் நியமிக்கப்படுவார் என்பது உறுதியாக

தெரிய வேண்டும். மேலும் தற்போதைய நிலையில் மின் கட்டண உயர்வை திரும்ப பெற வேண்டும், மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று வாதிடப்பட்டது.

தமிழ்நாடு அரசு தரப்பில், சட்டத் துறையை சேர்ந்த நபரை தேர்ந்தெடுக்கும் வகையில் ஓய்வு பெற்ற நீதிபதி தலைமையில் தேடல் குழு அமைக்கப்பட்டுள்ளது. மேலும் ம னுதாரரின் நோக்கம் கட்டண உயர்வை ரத்து செய்ய வேண்டும் என்பதே தவிர, தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்துக்கு சட்டத்துறை உறுப்பினரை நியமனம் செய்ய வேண்டுவது அல்ல. எனவே மனுதாரரின் கோரிக்கைகளை நிராகரிக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது.

இருதரப்பு வாதங்களையும் கேட்டுக்கொண்ட நீதிபதிகள், தமிழக அரசு உச்ச நீதிமன்றத்தால் கொடுக்கப்பட்ட கால அவகாசத்துக்குள் உறுப்பினர் நியமனத்தை செய்ய வேண்டும் என அறிவுறுத்தியதுடன் தற்போதைய நிலையில், தமிழ்நாட்டில் மின் கட்டண உயர்வுக்கு தடை விதிக்க முடியாது எனவும் நீதிபதிகள் தெரிவித்தனர்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# தம்பிலுவில் முனையூரில் வரம்புப் பயிர்ச் செய்கை!







(வி.ரி. சகாதேவராஜா)

விவசாயத்துக்கு மேலதிகமாக வயல்களில் உள்ள வரம்புகளில் உணவுப் பயிர்ச்செய்கையை மேற்கொள்ள கமநல சேவைகள் திணைக்களம் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

அந்த வகையில் திருக்கோவில் பிரதேசத்தில் வயல் வரம்புகளில் உணவுப்பயிர்ச்செய்கையினை முன்னெடுப்பதற்காக விவசாயிகளுக்கு பயிர் விதைகள் வழங்கி வைக்கும் நிகழ்வு கமநல நிலைய அபிவிருத்தி உத்தியோத்தர் மயில்வாகனம் அஜந்தன் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

வரம்புகளில் உணவுப்பயிர் செய்கையினை மேற்கொள்வதனூடாக தேசிய உணவு ப்பாதுகாப்பினை உறுதிப்படுத்தல் எனும் திட்டத்தின் கீழ் திருக்கோவில் பிரதேச விவசாயிகளுக்கு மரக்கறி விதைகள்20) வழங்கி வைக்கப்பட்டன. இப் பயிர்செய்கையின் விதைகள் நடும் ஆரம்கட்ட நிகழ்வானது தம்பிலுவில் முனையூர் விவசாய கண்டத்தில் முன்னெடுக்கப்பட்டது. இந் நிகழ்வில் திருக்கோவில் பிரதேச செயலாளர் த.கஜேந்திரன், தம்பிலுவில் கமநல நிலைய அபிவிருத்தி உத்தியோத்தர் ம.அஜந்தன், விவசாய போதனாசிரியர்களான எஸ்.சுஜிகாந்தன், எஸ்.சித்திரன் மற்றும் தம்பிலுவில் ஏ.பி.சி. தலைவர் ச.நடேசபிள்ளை ஆகியோர் கலந்து கொண்டு விதைகளை வழங்கி வைத்தனர்.

## உலக நீரிழிவு தினத்தை ஒட்டி கல்முனையில் சைக்கிள் பவனி







(வி.ரி.சகாதேவராஜா)

உலக நீரிழிவு தினத்தை ஒட்டி கல்முனை ஆதார வைத்தியசாலையினர் நேற்று திங்கட்கிழமை சைக்கிள் பவனியை மேற்கொண்டனர்.

கல்முனை ஆதாரவைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் டாக்டர் இரா. முரளீஸ்வரன் தலைமையில் இப்பவனி இடம் பெற்றது.

இதன் போது வைத்தியசாலையின் வைத்திய அதிகாரிகள், ஊழியர்கள், அபிவிருத்திச் சபை குழுவினர், நலன் விரும்பிகளெனஒ பலரும் சைக்கிளில் பயணித்தார்கள். நீரிழிவு நோய் தொடர்பில் மக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக இச்சைக்கிள் பவனி ஏற்படுத்தப்பட்டது. பவனி வைத்தியசாலையில் ஆரம்பித்து கல்முனை நகர் ஊடாக வலம் வந்து மீண்டும் வைத்திய சாலையை வந்தடைந்து . அங்கு ஒரு விழிப்புணர்வு கூட்டம் இடம்பெற்று பவனி முடிவடைந்தது.

## கல்முனை நூலகத்தின் ஏற்பாட்டில் செயலமர்வு

(எம்.எம்.அஸ்லம்)

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு 'அறிவார்ந்த சமூகத்திற்கான வகுப்பு' எனும் தொனிப்பொருளில் கல்முனை பொது நூலகம் ஒழுங்கு செய்திருந்த 'நூலக தகவல் தேடுகை பொறிமுறை' எனும் தலைப்பிலான விசேட பயிற்சி செயலமர்வு நேற்று திங் கட்கிழமை மருதமுனை சமூக வள நிலையத்தில் நடைபெற்றது.

கல்முனை மநகர முதல்வர், ஆணையாளர் மற்றும் பிரதி ஆணையாளர் ஆகியோரின் வழிகாட்டலில் கல்முனை பொது நூலகத்தின் நூலகர் ஏ.சி.அன்வர் சதாத் தலைமையில் இடம்பெற்ற இச்செயலமர்வில் கிழக்கு பல்கலைக்கழக சிரேஷ்ட உதவி நூலகர் பீ.பிரசாந்தன் வளவாளராகக் கலந்து கொண்டு விரிவுரைகளை நிகழ்த்தினார்.

இதில் கல்முனை மாநகர சபையின் கீழ் இயங்கும் கல்முனை, மருதமுனை, சாய்ந்தமருது, நற்பிட்டிமுனை ஆகிய 04 பொது நூலகங்களின் நூலகர்கள் மற்றும் பணியாளர்கள் உட்பட 40 ஊழியர்கள் பங்கேற்றிருந்தனர்.








# கொட்டகலை நகரில் பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்து போதைப்பொருள்கள் பாவனை!

## முறியடிக்க விசேட வேலைத்திட்டம் முன்னெடுப்பு

கொட்டகலை பிரதேசத்தில் பாடசாலை மாணவர்களை இலக்குவைத்து போதைப்பொருள் பாவனை மற்றும் விற்பனை செய்யும் வர்த்தகர்கள் மற்றும் சம்பந்தப்பட்டவர்களைக் கைதுசெய்து போதைக்கு அடிமையாகும் பாடசாலை மாணவர்களை மீட்கும் வேலைத்திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கொட்டகலை ஐக்கிய வர்த்தக சங்கத்தின் தலைவர் புஷ்பா விஸ்வநாதன் மற்றும் நுவரெலியா மாவட்ட உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஆகியோரின் தலைமையில் கொட்டகலை ஸ்ரீமுத்து விநாயகர் இந்து ஆலய மண்டபத்தில் இந்த வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்தவதற்கான ஆரம்பகட்ட கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

கொட்டகலை ஐக்கிய வர்த்தக சங்கத்தின் ஏற்பாட்டில் ஆரம்பிக்கப்பட்ட இந்த வேலைத்திட்டத்தில் கொட்டகலை பிரதேசத்தில் உள்ள பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், நகர வர்த்தகர்கள், மதகுருமார்கள், வாகன சாரதிகள், கிராம சேவகர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள் மற்றும் பொலிஸார் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்ட கொட்டகலையில் உள்ள பிரதான பாடசாலைகள் மற்றும் தோட்டப்புற பாடசாலைகளின் அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள், தமது பாடசாலைகளில் உயர்தரத்தில் கல்வி கற்கும் பெருமளவிலான மாணவர்கள் பல்வேறு போதைப் பொருள்களை பாவிக்கும் பழக்கத்துக்கு உள்ளாகியுள்ளனர் எனக் கருத்துகளைப் பகிர்ந் தனர். இந்தக் கலந்துரை யாடலில், அவ்வாறான மாணவர்கள் இனங்காணப்பட்டு, அந்த மாணவர்களை வகுப்புக்களுக்குத் தடைவிதித்து, அதற்கமைவாக, போதைப் பொருள் பாவனையிலிருந்து ஏனைய மாணவர்களை காப்பாற்ற, பெற்றோரின் ஆதரவுடன் திட்டம் முன்னெடுக்கப்படவேண்டுமென, அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் கோரிக் கைகளையும் முன்வைத் தனர்.

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி காரணமாகப் பிரதான பாடசாலைகள் மற்றும் தோட்டப்புற பாடசாலைகளில் 6 ஆம் ஆண்டு முதல் 11 ஆம் ஆண்டு வரையிலான வகுப்புகளில் உள்ள மாணவர்களின் வருகைப்பற்றாக்குறை காணப்படுவதாகவும், அந்த மாணவர்களும் போதைப்பழக்கத்துக்கு அடிமையாகியுள்ள தாகவும் தகவல்கள் கிடைத்துள்ளதாக இதன்போது அதிபர்கள் சுட்டிக்காட்டினர். அத்தோடு, கொட்டகலை நகரில் உள்ள குறிப்பிட்ட சில மருந்துக்கடைகளில் (பாமசி) பாடசாலை மாணவர்களுக்கு போதை மருந்துகளை விற்பனை செய்வதாகவும், போதைப்பொருளை வாங்கிய பாடசாலை மாணவர்கள் பாடசாலைக்கு வந்து மிக இரகசியமாக போதைப்பொருள்களை அருந்துவதாகவும் அதிபர்கள் இதன்போது மேலும் தெரிவித்தனர்.

இந்தக் கலந்துரையாடலில் அதிபர்கள், ஆசிரியர்கள், நலன்விரும்பிகள் ஆகியோர் தெரிவித்த கருத்துகளின் அடிப்படையில், இந்தப் போதைப்பொருள் பழக்கத்திலிருந்து மாணவர்களை விடுவிக் கவும், சமூகத்தை பாதுகாப்பதற்காகவும், அது தொடர்பாக ஆராய்வதற்கான குழுக்களை நியமிக்கவும் நடவடிக்கைகள் எடுக்கவுள்ளதாக கொட்டகலை ஐக்கிய வர்த்தக சங்கத்தின் தலைவர் புஷ்பா விஷ்வநாதன் தெரிவித்ததோடு, போதைப் பொருள் விற்பனை செய்யும் நபர்களை பற்றி பொலிஸாருக்கு தகவல்களை வழங்க பொது மக்கள் உதவி செய்ய வேண்டும் என நுவரெலியா மாவட்ட உதவி பொலிஸ் அத்தியட்சகர் தனது உரையில் கோரிக்கையும் முன்வைத்தார்.



# பேருவளையில் சர்வதேச கடற்றொழிலாளர் தினம்!

பேரலைகள் போன்ற சவால்களை எல்லாம் முறியடித்த அமைச்சர் டக்ளஸின் தலைமையில், பேரலைகளின் சக்தி எனும் தொனிப் பொருளில் சர்வதேச கடற்றொழிலாளர் தினம் கொண்டாடப்படுவது மகிழ்ச்சி அளிக்கின்றது என்று பிரதமர் தினேஸ் குணவர்த்தன தெரிவித்தார்.

மேலும், நாடு பொருளாதார நெருக்கடிகளை சந்தித்துள்ள காலகட்டத்தில் சவால்மிக்க பொறுப்பை ஏற்றுள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் இராஜாங்க அமைச்சர் பியல் நிஸாந்த ஆகியோரின் செயற்பாடுகளைப் பாராட்டிய பிரதமர், நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு கடற்றொழில் துறையிடமிருந்து கணிசமான பங்களிப்பை எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

கடற்றொழில் சமூகத்தை மேம்படுத்துவதற்கான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் புதிய தொலைநோக்கிற்கு அமைவாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் இராஜாங்க அமைச்சர் பியல் நிசாந்த ஆகியோரின் வழிநடத்தலில் சர்வதேச கடற்றொழிலாளர் தினம் பேருவளையில் நேற்று (திங்கட்கிழமை) இடம்பெற்றது.

'பேரலையின் சக்தி' எனும் தொனிப்பொருளில் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வின் பிரதம விருந்தினராக பிரதமர் தினேஸ் குணவரத்தன கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடற்றொழிலாளர் சமூகத்தின் நலனைக் கருத்தில்கொண்டு, புதிய கடற்றொழில் காப்புறுதித் திட்டம், கடற்றொழிலாளர்களுக்கான புதிய ஓய்வூதியத் திட்டம், 'ஆழியின் அரும்புகள்' சிறுவர் சேமிப்புத்திட்டம் போன்றவை ஆரம்பிக்கப்பட்டதுடன், கடற்றொழில் குடும்பங்களில் சிறந்த பெறுபேறு களைப் பெற்ற பிள்ளைகள் கௌரவிக்கப்பட்டதுடன் புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டன.

அத்துடன் களுவாமோதர வாய்க்காலில் நன்னீர் மீன் குஞ்சுகள் விடுவித்தல், அலங்கார மீன் வளர்ப்பில் ஈடுபடும் தொழில் முயற்சியாண்மையாளர்கள் 60 பேருக்கு இரண்டாம் கட்ட நிதியுதவி, அலங்கார மீன் வளர்ப்பில் ஈடுபடும் புதிய தொழில் முயற்சியாளர்கள் 4 பேருக்கு தலா 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதியுதவி போன்றவையும் வழங்கி வைக்கப்பட்டன.

அதேவேளை, பேருவளை மருதானை கடற்றொழிலாளர் இறங்குதுறையைப் பார்வையிட்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, மேற்படி இறங்குதுறையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற தூர்வாரல் செயற்பாடுகளின் முன்னேற்றங்கள் தொடர்பாக சம்பந்தப்பட்ட கடற்றொழிலாளர் சங்கப் பிரதிநிதிகளுடனும் மீன்பிடித் துறைமுகக் கூட்டுத்தாபன அதிகாரிகளுடனும் கலந்துரையாடியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கையில் அதிகரிக்கும் கொவிட் தொற்றாளர்கள்!

இலங்கையில் நாளாந்தம் பதிவாகும் கொரோனா தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை குறைவாகவே காணப்படுவதாக சுகாதாரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும் ஞாயிற்றுக்கிழமை இரண்டு கொரோனா மரணங்கள் பதிவாகியுள்ளது.

அதன்படி இலங்கையில் பதிவான மொத்த கொரோனா மரணங்கள் எண்ணிக்கை 16 ஆயிரத்து 793 என சுகாதாரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, ஞாயிற்றுக்கிழமை 17 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என சுகாதாரத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

# மன்னார் மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளராக சிவராஜா நியமனம்!



மன்னார் மாவட்டத்துக்கான உதவித் தேர்தல் ஆணையாளராக வி. சிவராஜா நியமிக்கப்பட்டுள்ளார்.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் ஏ.ஸ்ரான்லி டிமெல் முன்னிலையில் நேற்று (திங்கட்கிழமை) மன்னார் மாவட்டத்துக்கான உதவி தேர்தல் ஆணையாளராக கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார்.

கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக அவர்கள் மன்னார் மாவட்ட செயலகத்தில் உதவி மாவட்ட செயலாளராக கடமையாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது.

# கம்மன்பிலவுக்கு விதிக்கப்பட்ட வெளிநாட்டு பயணதடை நீக்கம்

முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு விதிக்கப்பட்டிருந்த வெளிநாட்டு பயணத் தடையை தற்காலிகமாக நீக்கி கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கம்மன்பிலவால் முன் வைக்கப்பட்ட பிரேரணையை பரிசீலித்த கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி நாமல் பலாலே இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

கம்மன்பில சார்பில் ஆஜரான சட்டத்தரணி இனோகா பெரேரா, உதய கம்மன்பில புனித யாத்திரைக்காக இந்தியா செல்ல விரும்புகிறார் எனவும், தற்போதைய பயணத்தடையை இந்த மாதம் 23 ஆம் திகதிக்கு முதல் 29 ஆம் திகதி வரை இடைநிறுத்துமாறும் நீதிமன்றில் கோரிக்கை விடுத்தார். இந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட நீதிமன்றம் கம்மன்பிலவுக்கு விதிக்கப்பட்ட வெளிநாட்டு பயணத்தடையை உரிய காலத்துக்குள் நீக்குமாறு உத்தரவிட்டது.

ஆஸ்திரேலிய வர்த்தகர் பிரையன் டிக்கிற்குச் சொந்தமான நிறுவனத்தின் பங்குகளை 2 கோடியே 10 லட்சம் ரூபாவுக்கு விற்றதாகவும், போலியான சட்ட மூலத்தை உருவாக்கி நம்பிக்கையை மீறியதாகவும் உதய கம்மன்பிலவுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பண்டிகைக் காலங்களில் முட்டைக்கு தட்டுப்பாடு!

## ஏற்படும் என எச்சரிக்கின்றனர் உற்பத்தியாளர்கள்

முட்டை உற்பத்தி 50 சதவீதமாகக் குறைந்துள்ளதாக தேசிய கால்நடை உற்பத்தியாளர்கள் தெரிவிக்கின்றனர். நேற்று (திங்கட்கிழமை) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிடும்போதே உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் அமைப்பாளர் சுஜீவ கம்மிக்க இதனைத் தெரிவித்தார். இதன் காரணமாக தற்போது சந்தையில் முட்டைக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

எதிர்வரும் பண்டிகைக் காலத்தில் இந்த நிலைமை மேலும் மோசமடையலாம் எனவும் அவர் குறிப்பிட்டார்.